**செய்தி வெளியீடு எண்: 278** **நாள்: 07/05/2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (7.5.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை, எழிலகம் வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் படுகாயமடைந்து தற்போது குணமடைந்த கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி. பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் சந்தித்து, தனது உயர் சிகிச்சைக்கான செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ள உத்தரவிட்டு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தார்.

சென்னை எழிலகம் வளாகத்தில் அமைந்துள்ள சமூகநல இயக்குநரகம், தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரக கட்டடங்களில் கடந்த 15.1.2012 அன்று நள்ளிரவு 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. அத்தீயினை அணைக்கும் பணியில் கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி. பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது பலத்த தீக்காயமடைந்து சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 19.1.2012 அன்று சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி. பிரியா ரவிச்சந்திரன் அவர்களை நேரில் சென்று உடல்நலம் விசாரித்து, மீண்டும் அவர் இயல்பு நிலைக்கு திரும்புவதற்குரிய அனைத்து மருத்துவச் செலவுகளையும் அரசே ஏற்கும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்த கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி. பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தலைமைச் செயலகத்தில் தனது குடும்பத்தினருடன் சந்தித்து, தீ விபத்தில் சிக்கி பலத்த தீக்காயங்களால் உயிருக்கு போராடிய நிலையில் நேரில் சந்தித்து தைரியமும், ஆறுதலும் கூறியதோடு, தனது சிகிச்சைக்காக அனைத்து மருத்துவ உதவிகளையும் வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்:7.5.2012